

# போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

ஆத்தூர், ஆக. 18: ரோட்டரி ஆத்தூர் மிட்டவுன் சங்கத்தின் சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி ஆத்தூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்கத் தலைவர் எல்.கிரிதாரி தலைமை வகித்தார். ஆத்தூர், பயணியர் விடுதி ஆய்வு மாளிகை முன்புறம் நடைபெற்ற மாரத்தான் போட்டியை ஆத்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் கே.சி. சதீஸ் குமார் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். அனைவரும் போதை தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர்.

சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆளுநர் வி.சிவகுமார், முதன்மை விருந்தினர்களாக ஆத்தூர் கோட்டாட்சியர் டி.பிரியதர்ஷினி, இந்திய கைப்பந்து விளையாட்டு வீராங்கனை டி.பி.எழில்மதி, மாவட்டத் தலைவர் எஸ்.குணசேகரன், ஆத்தூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ஏ.பி. ஜெயசங்கரன், நகர திமுக செயலாளர் கே.பாலசுப்ரமணியம், நகர அதிமுக செயலாளர் அ.மோகன், பொருளாளர் வி.சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



ஆத்தூரில் நடைபெற்ற மாரத்தான் போட்டியைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்த ஆத்தூர், காவல் துணைக் கண்காணிப்பாளர் கே.சி.சதீஸ்குமார். உடன் சங்க நிர்வாகிகள்.

மாரத்தான் போட்டி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சுமார் 7 கி.மீ. தொலைவுக்கு நடைபெற்றது. போட்டியில் ஆண்களுக்கான முதல் பரிசை நாசிக் பகுதியைச் சேர்ந்த பிரமோத் குமார், இரண்டாம் பரிசை ஒகுரைச் சேர்ந்த கோவிந்த ராஜ், மூன்றாம் பரிசை நாசிக் அணில், நான்காம் பரிசை சேலத்தைச் சேர்ந்த ரஞ்சித் குமார் ஆகியோர் பெற்றனர்.

பெண்களுக்கான மாரத்தான் போட்டியில் முதல் பரிசை ஜலகண்டாபுரத்தைச் சேர்ந்த லதா, இரண்டாம் பரிசை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வினிதா, மூன்றாம் பரிசை திருச்சியைச் சேர்ந்த கிருத்திகா, நான்காம் பரிசை சேலத்தைச் சேர்ந்த மீனாட்சி ஆகியோர் பெற்றனர். போட்டியில் வென்றவர்களுக்கு சிறப்பு பரிசும் கோப்பையும் வழங்கப்பட்டன. அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இயக்குநர்கள் சீனிவாசன், ஆர். இளவரசு, ஹரி (எ)சந்திரசேகர், எம்.பழனிவேல், சக்தி, பாஸ்கர், ஜெ.ரமேஷ், சி.சிவகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மாரத்தான் போட்டிக்கு ஆத்தூர் நகர காவல் ஆய்வாளர் அழகுராணி, மருத்துவர்கள், ஆம்புலன்ஸ், தன்னார்வலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். சங்கச் செயலாளர் எம்.மூர்த்தி நன்றி கூறினார்.